DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 133/2023

Prosecution witness – PW.1

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு.ரகுநாயகம் | Caste: | |
| Father's Name | : வேலு | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

07.11.2025 – 11.35 AM

எதிரிகள் ஆஜர் இல்லை. மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் சிலிப்பி கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். இருவரும் உள்ளூர்காரர்கள். எனக்கும் எதிரிகள் தரப்பினருக்கும் இடையே என் மகளை எதிரிகள் வீட்டார் கடத்தியது சம்மந்தமாக நீண்ட நாட்களாக பிரச்சனை இருந்து கொண்டே தான் வருகிறது. கடந்த 28.07.2021ம் தேதி ஒரு நாள் மாலை 05.00 மணியளவில் எனது இரு சக்கர வாகனமான TN 65 3137 என்ற பதிவு எண் கொண்ட XL இருசக்கர வாகனத்தில் வீரசோழன் சென்று விட்டு எனது வீட்டிற்கு அருகில் வந்து கொண்டிருந்தபோது வீட்டில் ராமலிங்கமும், மூர்த்தியும் மது போதையில் எனது மனைவி முத்து என்பவரை பார்த்து தேவிடியா மகளே உன்னை அடித்தால் யார் கேட்க வருவார் என்று ஆபாசமாக பேசிக் கொண்டிருந்தார்கள்.

2. நான் வருவதை பார்த்த எதிரிகள் என்னையும் தேவிடியா மகனே என்று ஆபாசமாக பேசினார்கள். நான் எதிரிகளிடம் மல்லுக்கட்ட முடியாது என்பதால் நிலையத்தில் சென்று சொல்லலாம் என்று நினைத்து எனது இரு சக்கர வாகனத்தில் மண்டலமாணிக்கம் காவல் நிலையத்திற்கு சென்று போலீசாரிடம் புகார் கொடுத்துவிட்டு மீண்டும் எனது வீட்டிற்கு செல்வதற்காக எனது இரு சக்கர வாகனத்தில் கண்மாய் கரையை தாண்டிய போது எதிரிகள் இரு சக்கர வாகனத்தில் எனக்கு முன்பாக எதிர் திசையில் வந்து என்னுடைய இரு சக்கர

வாகனத்தில் மோதினார்கள்.

3. அவ்வாறு மோதியதால் நான் வண்டியோடு கீழே விழுந்துவிட்டேன். அதில் எனக்கு வலது கணுக்காலிலும், வலது முழங்காலிலும் இரத்தக்காயமும், இடது பக்க நெஞ்சில் ஊமைக்காயமும் ஏற்பட்டது. அந்த சம்பவத்தை பார்த்த அருகிலிருந்த சோலையப்பன் வந்து என்னை தூக்கிவிட்டார். நான் கீழே விழுந்தவுடன் எதிரிகள் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டார்கள். பின்னர் சோலையப்பன் என்னை அந்த வழியாக வந்த ஒரு ஆட்டோவில் ஏற்றி கமுதி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். கமுதி அரசு மருத்துவமனையில் எனக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

4. புகார் வாக்குமூலத்தை நான் கமுதி காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்று சாட்சி கூறிவிட்டு பின்னர் கமுதி அரசு மருத்துவமனையில் கொடுத்ததாக கூறினார். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் கூறிய சங்கதிகளை போலீசார் எழுதிக் கொண்டு என்னிடம் படித்துக் காண்பித்தார்கள். நான் சொன்னபடி எழுதப்பட்டிருந்தது. அந்த **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள். எனக்கு எதிரிகளை பார்த்தால் அடையாளம் தெரியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜரில்லை.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

1. நான் தற்போது நீதிமன்றத்தில் கூறிய சங்கதிகளை தான் போலீசார் விசாரித்தபோதும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் நான் அன்றைய தினம் ஓட்டிச் சென்றதாக சொல்லப்படுகிற எனது இரு சக்கர வாகனத்தின் பதிவெண்ணில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் நான் கூறியதை தான் எழுதினார்கள். 28.07.2021 ம் தேதி கமுதி அரசு மருத்துவமனையில் போலீசாரிடம் புகார் வாக்குமூலம் அளித்தேன். எனது வீட்டருகே எதிரிகள் பிரச்சனை செய்ததாக புகார் வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் ஆமாம்.

2. எதிரிகள் ஓட்டி வந்ததாக சொல்லப்படுகிற இரு சக்கர வாகனத்தின் பதிவு எண், வண்டியின் கலர், மாடல் ஏதேனும் கூற இயலுமா என்றால் என்னை இடித்த வேகத்தில் அதை எல்லாம் நான் பார்க்கவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படுவதற்கு பின்னர் நான் முதலில் காவல் நிலையம் சென்றேனா அல்லது அரசு மருத்துவமனை சென்றேனா என்றால் அரசு மருத்துவமனைக்கு தான் சென்றேன். என்னை ஒரு ஏட்டையா வந்து விசாரித்தார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகிற கண்மாய் கரை ரோடு என்பது குறுகிய பாதை என்றால் சரியல்ல. 10 அடி அகலமுள்ள ரோடு அது.

3. எதிரிகள் சிலிப்பியிலிருந்து வந்து கண்மாய் கரையில் எதிரிகள் என் மீது மோதினார்கள். நான் கூறுவது போல அவ்வளவு வேகமாக வந்து எதிரிகள் எனது இரு சக்கர வாகனத்தில் மோதியிருந்தால் அவர்களும் கீழே விழுந்து அவர்களுக்கும் காயம் ஏற்பட்டிருக்கும் என்றால் எனக்கு வயதாகிவிட்டது. அதனால் என்னால் இரு சக்கர வாகனத்தை பிடிக்க இயலாமல் கீழே விழுந்துவிட்டேன். ஆனால் எதிரிகள் வாலிப வயதினர் என்பதால் திடகாத்திரமாக வண்டியை பிடித்துக் கொண்டார்கள். அவர்கள் கீழே விழவில்லை.

4. நான் கூறியபடி சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எனது மகளை எதிரிகளின் வீட்டார் கடத்திச் சென்றதால் நான் தான் எதிரிகள் மீது கோபம் கொண்டு அவர்களிடம் அடிக்கடி தகராறு செய்து வந்தேன் என்றாலும், தற்போதும் நானாகவே தவறி கீழே விழுந்ததை சாதகமாக்கிக் கொண்டு எதிரிகள் மீது பொய் புகார் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2025.11.07 17:28:52 +0530